மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நம் கவனக் குறைவாக இருந்திருக்கும். மாவட்ட மருத்துவ மனையிலிருந்து நாம் அனுப்பாதிருந்தால் Post haste in sending medicine immediately கவனக் குறைவாக இருந்திருக்கும். அந்தச் சூழ்நிலையிருந்தாலும்கூட சமாளித்து கவனக் குறைவு இல்லாமல்—நாய்க்கடியிலே இரண்டு வகைகள் இருக்கின்றன, மேட் டாக் பைட் இருந்தால், ரேபிஷ், அதற்கு மருந்தும், சாதாரணமான நாய் கடித்துவிட்டால் பை வே ஆப் அபன்டன்ட் காஷன் பாதுகாப்புக்காக ஊசி போடுகிறோம். நடவடிக்கை எடுத்திருக்கிறோம். பைத்திய நாயாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், சாதாரண நாய் கடித்தாலும் அதற்கு 7 ஊசிகள் போடுகிறோம், இதற்கு 14 ஊசிகள் போடுகிறோம். தட்டுப்பாடு இருந்தாலும்கூட உடனடியாக சமாளித்து இருக்கிறோம். அது மட்டுமல்லாமல் நடவடிக்கையையும் எடுத்திருக்கிறோம். By way of abundant caution, a permanent advance of Rs. 1000 ஆயிரம் ரூபாய் மாவட்ட மருத்துவ மனைக்கு முன் கூட்டியே பாஷ்டியூர் இன்ஸ்டியூட்டிற்கு அந்தப் பணத்தைக் கட்டிவிடுங்கள் எந்தவிதமான தாமதமும் ஆகிவிடக்கூடாது என்று அட்வான்ஸாகக் கொடுத்து வைத்திருக்கிறோம். ஆகவே இனிமேல் இப்படிப்பட்ட பிரச்சினைக்கு வாய்ப்பு இல்லை.

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தீக்காயங்களுக்கான தனி வார்டு.

*வினா எண் 571—திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தீக்காயங்களுக்காக தனியாக ஏர்கண்டிஷன் வார்டு ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் உடனடியாக துவங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முசிறி பகுதியிலுள்ள குஷ்டரோகிகள்.

*வினா எண் 572—திரு. எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி பகுதியில் குஷ்டரோகிகள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

(அ) இல்லை.

(ஆ) ஏற்கனவே எல்லா நடவடிக்கைகளும் எடுத்து வருகின்ற காரணத்தால் இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அந்தப் பகுதியிலே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் காவிரிக் கரையோரமாக இருக்கக்கூடிய இனம் சாலியர் என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள். அந்த அந்த வட்டாரத்திலே இருக்கக் கூடியவர்கள் சரியான மருத்துவ ஆலோசனைகளைப் பெறாத காரணத்தால் காவிரிக் கரையோரமாக அவர்கள் அசிங்கப்படுத்தி அந்த வியாதி அதிகப்படுவதற்கு என்ன என்ன வாய்ப்புகள் உண்டோ அவ்வளவும் அங்கே நடந்துக் கொண்டிருக்கின்றன. இதுகுறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் தோளூர்பட்டி என்ற லெப்ரஸி கன்ட்ரோல் யூனிட்டிலிருந்து வேன்கள் சென்று லெப்ரஸி டிடக்ஷன் ஆயிரம் பேர்களுக்கு இவ்வளவு என்று செய்து பார்த்து அதன் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். 1978 ஆம் ஆண்டிலே, 56,889 பேர்கள் இருக்கிறார்கள், அவர்களில் 1,014 பேர்களுக்கு ஆக்டிவ் கேஸஸ் இருந்தது, 1979 ஆம் ஆண்டிலே அதே தொகைதான், அவர்களில் 885 பேர்களுக்கு இருந்தது. 1980 ஆம் ஆண்டிலே 504 பேர்களுக்கு இருந்தது. ஆகவே பர்சன்டேஜ் பார்த்தால் 1978 ஆம் ஆண்டு, 17 சதவீதம், 1979 ஆம் ஆண்டு 15 சதவீதம், 1980 ஆம் ஆண்டு 12 சதவீதம் என்று இருக்கிறது. ஆகவே தான் குறைந்திருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடியதை எழுதிக் கொடுத்தால் உடனடியாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஷ்டரோகிகளுக்கு என்று தங்கும் இடங்கள் Leprosy Units கட்டப்பட்டிருந்தும், வெளியிலே அதிகமான பேர் நடமாடிக்கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்டவர்களைத் தீவிரமாகப் பிடித்து, அந்த விடுதிகளில் தங்க வைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விடுதிகளை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், அதிலே இடம் போதாமல் வெளியே இன்னும் இருக்கிறார்கள் ; அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இம்மாதிரியான மருந்தை ஊர்திகள் மூலமாக எடுத்துச் சென்று அந்தந்த இடங்களில் மருந்து கொடுத்து ஓரளவுக்கு அதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டம்

* வினா எண் 573—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :—

(அ) மற்றும் (ஆ): ஆம். இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது தமிழகத்தில் மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றி. இன்றைக்கு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்று தனியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதைப் போல, அமைக்கவிருக்கும் மருத்துவப் பல்கலைக் கழககத்தை எந்த மாவட்டத்தில் அமைப்பது என்று அரசு ஏதாவது முடிவு செய்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அதை அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய பதிலிலேயே சொல்லியிருக்கிறேன் பரிசீலனையில் உள்ளது என்று. அதற்காக ஸ்பெஷல் ஆபீசர் ஒருவரை நியமித்து, என்னென்ன தேவைகள், எப்படிப்பட்ட தேவைகள், நில ஆர்ஜிதம் எவ்வளவு செய்ய வேண்டும் ; அதுமட்டுமல்லாமல், கட்டிட கன்ஸ்ட்ரக்ஷனுக்கு நமக்கு எவ்வளவு தொகை செலவாகும் ; equipment purchase, furniture ஆகியவற்றின் அமைப்பு எப்படியிருக்க வேண்டும் ; அப்படிச் சட்டத்தைக் கொண்டு வந்தால் அது எப்படி இருக்க வேண்டும் ஆகிய எல்லாவற்றையும் பற்றி ஸ்பெஷல் ஆபீசர் பரிசீலனை செய்தால், அதற்குப்பிறகு அம்மாதிரி ஒரு பல்கலைக் கழகத்தைக் கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.